# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10.* Ph. 0452 – 4354302

## இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

**முன்னுரை :**

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் உண்மையானது, அவரது வசீகரமான வாழ்க்கை சரிதையிலிருந்து உண்டாக வில்லை. ஆனால் அவரது வாழ்க்கைச்சரிதை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் உண்மையிலிருந்து உருவானதாகும். பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த (சந்தேகப்பேர் வழியாகிய) ரெனன் கூறியதாவது, ''கிறிஸ்தவர்களாகிய நீங்கள், காலி கல்லறையின் மணத்திலே வாழ்கிறீர்கள்.''

இந்த உண்மைதான் அப்போஸ்தலர்களின் பிரசங்கத்திற்கு அடிப்படைக் கருத்தாக அமைந்தது. கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் யாவரும் அவருடைய உயிர்த்தெழுதலின் உண்மையயையும், முக்கியத்துவத்தையும் ஆழமாய் அறிந்துகொள்ளுதல் மிகவும் அவசியமாய் இருக்கிறது.

### இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

1. மற்ற எல்லா மதங்களுக்கும், கிறிஸ்தவத்திற்கும் உள்ள மிகப்பெரும் வேறுபாடு, கிறிஸ்தவத்தின் பொருளாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதல் ஆகும். வேறு எந்த மதஸ்தாபகரும் தன்னைப்பற்றி இந்தவிதமான கோரிக்கையை எழுப்பவில்லை.
2. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்மேல் விசுவாசம் வைப்பது, ஒருவனுடைய சொந்த இரட்சிப்புக்கு மிகவும் அவசியம் (ரோமர் 10:9).
3. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தின் வேறு மூன்று அடிப்படை உபதேசங்களை உறுதிப்படுத்துகிறது :
   - அ. அவருடைய மாம்ச வெளிப்பாடு .. எபிரெயர் 10:5
   - ஆ. அவருடைய கன்னிப்பிறப்பு .. மத்தேயு 1:18
   - இ. நம்முடைய பாவங்களுக்காக அவருடைய மரணம் .. 1 கொரிந்தியர் 15:3; 2 கொரிந்தியர் 5:14,15
4. உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் தெய்வீகத்தையும், அவர் ஆண்டவர் என்பதையும் உறுதிப்படுத்துகிறது (ரோமர் 1:5; 1 கொரிந்தியர் 15:57; அப்போஸ்தலர் 16:31). அவரது முழுப் பெயரான, ''ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து'' என்பது உயிர்த்தெழுதலுக்கு முன்பு உபயோகிக்கப்படவில்லை.
5. கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்திராவிட்டால், அவருடைய போதனைகள் கொஞ்சங் கூட முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்காது.
6. உயிர்த்தெழுதல் இல்லையெனில் :
   - அ. பெந்தெகொஸ்தே நாள் இருந்திருக்காது (யோவான் 14:16; 16:7; அப்போஸ்தலர் 1:4–8).
   - ஆ. புதிய ஏற்பாடும் இருந்திருக்காது (அப்போஸ்தலர் 1:1,2; 1 யோவான் 1:1,2).
   - இ. சாட்சிகூற அல்லது புதிய உயிர்த்தெழுந்த வாழ்க்கை வாழ அசாதாரணமான வல்லமை இருந்திருக்காது (பிலிப்பியர் 3:10; அப்போஸ்தலர் 1:8; ரோமர் 6:5).
7. புதிய ஏற்பாடு முழுவதிலும் அதிகமான இடங்களில் உயிர்த்தெழுதலைப்பற்றி கூறப்பட்டிருப்பதைப் பார்க்கும்போதே, உயிர்த்தெழுதலானது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறியலாம்.
   - அ. குறிப்பாக உயிர்த்தெழுதலானது 100 தடவைகளுக்கும் மேலாகக் கூறப்பட்டுள்ளது.
   - ஆ. நான்கு சுவிசேஷ எழுத்தாளர்களும் இந்தச் சம்பவத்தை முழுவதுமாக ஒன்றுபோல கையாண்டுள்ளார்கள்.
   - இ. அப்போஸ்தலருடைய நடபடிகளின் புஸ்தகத்தில் கூறப்பட்டுள்ள 20 செய்திகளில் (தோராயமாக) 13 செய்திகள் உயிர்த்தெழுதலை வலியுறுத்துகின்றன.
   - ஈ. பவுல் எழுதிய நிருபங்களின் மையக்கருத்து ''உயிர்த்தெழுதலேயாகும்.''
8. பவுல் **1 கொரிந்தியர் 15:12–19–ல்** இயேசுகிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் ஏற்படும் பயங்கரமான விளைவுகளைக் கூறுகிறார். அதன்மூலம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எவ்வளவு முக்கியமெனத் தெரிகிறது.

## உயிர்த்தெழுதல் இல்லையென்றால் :

அ. கிறிஸ்து எழுந்திருக்கவில்லை (1 கொரிந்தியர் 15:13,16).

ஆ. அப்போஸ்தலர்களின் பிரசங்கங்கள் அர்த்தமற்றது (முயற்சியும் வீண்) (1 கொரிந்தியர் 15:14).

இ. எல்லாக் காலங்களிலும் வாழ்ந்த பரிசுத்தவான்களின் விசுவாசம் வீணாகவும், ஒன்றுமில்லாததாகவும் இருக்கும் (1 கொரிந்தியர் 15:14).

ஈ. உயிர்த்தெழுதலைப்பற்றி பிரசங்கிக்கும் அப்போஸ்தலர்களும், பிரசங்கிமார்களும் பொய்யராவார்கள் (1 கொரி.15:15).

உ. அப்போஸ்தலர்கள் தேவனுக்காகப் பொய்சாட்சி கூறினவர்களாக இருப்பார்கள் (1 கொரிந்தியர் 15:15)

ஊ. மரித்தோர்களும், கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தவர்களும் இனி ஒருபோதும் எழுந்திருக்க மாட்டார்கள் (1 கொரிந்தியர் 15:15,18).

எ. விசுவாசிகளின் விசுவாசமும் வீண் (1 கொரிந்தியர் 15:17).

ஏ. மரித்துப்போன விசுவாசிகளும் பாவத்தில் மரித்துக் கெட்டிருப்பார்கள் (1 கொரிந்தியர் 16:17,18).

ஐ. கிறிஸ்தவர்கள் தங்கள் விடுதலையைப்பற்றி அறிந்திராது இன்னும் தங்கள் பாவங்களிலேயே இருப்பார்கள் (1 கொரிந்தியர் 15:17).

ஒ. ஒருவருக்கும் நம்பிக்கையும், வருங்கால ஆசீர்வாதமும் கிடையாது. மரணமே முடிவாக இருக்கும் (1 கொரி. 15:19).

ஓ. விசுவாசிகளின் நிலையானது, மிகவும் வஞ்சிக்கப்பட்டவர்களாகவும் கவலைப்படத்தக்கவர் களாகவும், பரிதபிக்கப்படத்தக்க மக்களாகவும் பூமியில் இருப்பார்கள் (1 கொரிந்தியர் 15:19).

**இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்திருக்காவிட்டால் ஏற்பட்டிருக்கக்கூடிய இன்னும் சில விளைவுகள் :**

அ. இயேசுகிறிஸ்து தம்மைப் பின்பற்றியவர்களிடம், பொய்பேசி, அவர்களை வஞ்சித்தார்.

ஆ. பெந்தெகொஸ்தே நாளானது மிகவும் கற்பனை செய்யப்பட்ட ஒன்றாக இருக்கும்.

இ. நம்முடைய கிறிஸ்தவ அனுபவம் வெறும் ஏமாற்றமே.

ஈ. வேதாகமமானது பொய்யாகவும், சுத்தக் கட்டுக்கதையாகவும் காணப்படும்.

உ. பாவத்திற்குப் பரிகாரமிராது.

ஊ. உலகத்திற்கு நம்பிக்கை இருக்காது.

எ. நித்தியம் இருண்டதாகவும், பயமுள்ள இரகசியமாகவும் இருக்கும்.

## பாடம்

## I. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்கான ஆதாரங்கள் :

### அ. காலியான கல்லறையும், இயேசுகிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலும் :

ஒரு சிலர் 'கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், ஆவிக்குரிய பிரகாரமாகவே மாத்திரம்' என்பதும், 'அவர் கல்லறையினின்று சரீரப்பிரகாரமாக எழுந்திருக்கவில்லை' என்பதுமான கொள்கையைப் போதிக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டு சுவிசேஷங்களில் கூறப்பட்டுள்ள உண்மைகளுக்கு நேர் எதிரிடையாக இந்தக் கொள்கை இருப்பதால் இது நம்பத்தக்கதல்ல.

1. தூதனின் சாட்சி, "அவர் இங்கே இல்லை . . . . ." (மத்தேயு 28:6).
2. ஸ்திரீகள் காலியான கல்லறையைக் கண்டார்கள் (லூக்கா 24:3).
3. மகதலேனா மரியாள் காலியான கல்லறையைக் கண்டாள் (யோவான் 20:1).
4. பேதுருவும், யோவானும் காலியான கல்லறையைக் கண்டார்கள் (யோவான் 20:3–7).
5. ரோம காவலாளர் இயேசுவின் சரீரம் களவாடப்பட்டுச் செல்ல அனுமதித்திருக்க மாட்டார்கள்; மேலும் கல்லறையானது முத்திரையிடப்பட்டிருந்தது; பின்னர் காவலாளர்களுக்குப் பொய் சொல்லுவதற்கென பணம் கொடுக்கப்பட்டது (மத்தேயு 27:63–66; 28:12–15).
6. எந்தத் திருடனும், சீலைகளை ஒழுங்காக சுருட்டி வைத்திருக்கமாட்டான் (யோவான் 20:7)
7. அவருடைய சீஷர்கள் அவரைக் கண்டு தொட்டார்கள். அவரிடத்தில் இன்னும் ஆணித்தழும்புகள் இருந்தன (யோவான் 20:25–27).
8. கிறிஸ்து தாமே ஒரு ஆவி என்பதை மறுத்தார் (லூக்கா 24:39).

**ஆ. உயிர்த்தெழுதலுக்குப்பிறகு கிறிஸ்து கீழ்கண்டவர்களுக்குத் தரிசனமானதின் விபரம் :**

(கிறிஸ்டோபீன் CHRISTOPHENES என்றால் இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான தோற்றத்தைக் குறிக்கும்)

1. மகதலேனா மரியாள் .. யோவான் 20:14–18
2. 10 சீஷர் .. யோவான் 20:19
3. 11 சீஷர் .. யோவான் 20:26–29
4. எம்மாவுக்குச் சென்ற 2 சீஷர்கள் .. லூக்கா 24:13–32
5. மீன்பிடிக்கச் சென்ற சீஷர்கள் .. யோவான் 21:12–14
6. ஒரே நேரத்தில் 500 பேருக்கு .. 1 கொரிந்தியர் 15:6

   (பவுல் இந்தக் கடிதத்தை எழுதும்போது சிலர் உயிருடனே இருந்தனர்)
7. பவுல் (தமஸ்குவுக்குச் செல்லும் வழி) .. அப்போஸ்தலர் 9:1–9
8. ஸ்தேவான் (கல்லெறியப்படும்பொழுது) .. அப்போஸ்தலர் 7:55–60
9. இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகளாய் இருக்கிறோம் என்ற பேதுருவின் பிரசங்கம் .. அப்போஸ்தலர் 2:32
10. அப்போஸ்தலனாகிய யோவான் (பத்மூ தீவில்) .. வெளி. 1:9–18
11. லூக்காவோடுகூட அநேகருக்கு – அப்போஸ்தலர் 1:3

**இ. காரணமும் விளைவும் : இதிலிருந்து எழும்பும் விவாதம் :**

1. **கர்த்தருடைய நாள் :** (அப்போஸ்தலர் 20:7; 1 கொரிந்தியர் 16:2; வெளி. 1:10).
2. **புதிய ஏற்பாடு :** பவுல் உயிர்த்தெழுந்த இயேசுவை சந்தித்தது மாத்திரமல்லாமல் அவர் சத்தத்தையும் கேட்டதினால் எழுதினார் (அப்போஸ்தலர் 9:5–15)

   அப்போஸ்தலனாகிய யோவானும், உயிர்த்தெழுந்த இயேசுவின் சத்தத்தைக் கேட்டு, கண்டு, அவரை தன்னுடைய வாழ்க்கையில் அனுபவித்துப் பார்த்ததினாலும் எழுதினார் (1 யோவான் 1:1–4). எனவே, உயிர்த்தெழுதல் இருந்திராவிட்டால் புதிய ஏற்பாடு இருந்திருக்காது. மேலும் கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றிய காரியங்கள் அவருடனேகூட புதையுண்டு போயிருக்கும்.
3. **மாற்றமடைந்த சீஷர்கள் :** கோழைத்தனமான, பயப்படுகின்ற சீஷர்கள், தைரியமுள்ள பயமற்ற சாட்சிகளாக மாறினார்கள். இதற்கு முக்கிய காரணம் உயிர்த்தெழுதலாகும் (மத்தேயு 26:56; அப்போஸ்தலர் 4:2,8,13,31).
4. **பெந்தெகொஸ்தே நாள் :** கிறிஸ்து போகாதிருந்தால், பரிசுத்த ஆவியானவர் வரமாட்டார் என்று கிறிஸ்துதாமே தெளிவாகக் கூறியிருந்தார். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணினார். எனவே உயிர்த்தெழுதல் இல்லையெனில் பெந்தேகொஸ்தே நாளும் இல்லை, வல்லமையும் இல்லை (யோவான் 16:7; அப்போஸ்தலர் 1:5,8)
5. **கிறிஸ்தவ சபை :** சபையின் வெற்றிக் களிப்பானது அதன் கீர்த்தனைகளினாலும், ஆராதனைகளினாலும், ஊழியங்களினாலும் 1900 வருடங்களுக்கு மகிமையாக செயல்பட்டு வந்திருக்கின்றது. இதற்கு முக்கியக் காரணம் உயிர்த்தெழுதலாகும்.

## II. உயிர்த்தெழுதலின் வல்லமை:

அ. கிறிஸ்துவானவர் தேவன் என்பதையும், அவர் சகலத்தையும் செய்ய 'வல்லவர்' என்பதையும் உயிர்த்தெழுதலானது அறிவிக்கிறது (ரோமர் 1:4,5).

ஆ. கிறிஸ்துவுக்கு அழிதலின் விதியின் மீதும், புவிஈர்ப்பு விசையின் மீதும் (பரமேறும் போது), மரணத்தின்மீதும் 'வல்லமை' உண்டு என்பதை உயிர்த்தெழுதலானது தெளிவாகக் காட்டுகிறது (அப்போஸ்தலர் 1:9; 2:24; பிலிப்பியர் 3:21; 1 கொரிந்தியர் 15:54,57).

இ. யார் கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்களோ அவர்களைப் பரிசுத்தம் பண்ணவும், அவர்களிடத்தின்று பாவத்தை நீக்கவும், பிசாசின் கிரியைகளையும், வல்லமையையும் அழிக்கவும் கிறிஸ்துவுக்கு 'வல்லமை' உண்டு என்பதை உயிர்த்தெழுதலானது உலகிற்கு உறுதிப்படுத்துகிற ஒன்றாயிருக்கிறது (எபிரெயர் 9:26; 1 யோவான் 3:8; எபிரெயர் 2:14,15).

ஈ. உயிர்த்தெழுந்த கிறிஸ்து தாமே பின்வருமாறு கூறுகின்றார் : "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் . . . . " (மத்தேயு 28:18).

## III. உயிர்த்தெழுதலின் நோக்கம்:

**கீழ்கண்ட நோக்கங்களுக்காக உயிர்த்தெழுதலானது நடைபெற்றது :**

அ. புதிய வாழ்க்கையையும், உயிர்த்தெழுதலின் வல்லமையையும் விசுவாசிப்பவர்களுக்கு அளிக்கவும், கிறிஸ்தவ வாழ்க்கையானது (ஒரு) உண்மையானதாக அமையவும்.

1. எல்லா விசுவாசியும் ஆவிக்குரிய உயிர்த்தெழுதலை அனுபவிக்கிறான் (ரோமர் 6:4; கொலோசெயர் 3:1).
2. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தபோது எந்த அனுபவங்களை (அசாதாரணமாக வல்லமை) பெற்றாரோ, அதே அனுபவங்களை எல்லா விசுவாசிகளும் பெறமுடியும் (பிலிப்பியர் 3:10; எபேசியர் 1:19–20).
3. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது உயிர்த்தெழுந்த கிறிஸ்து அவனுக்குள் ஜீவிக்கிறார் என்பதை தன்னுடைய வாழ்க்கையின் மூலம் காண்பிப்பதாகும் (கலாத்தியர் 2:20).

ஆ. வருங்காலத்தில் நடக்கவிருக்கிற சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதலையும், ஆசீர்வாதமான, என்றென்றுமாக இருக்கக்கூடிய நித்தியத்தையும் விசுவாசிப்பவர்களுக்கு உத்திரவாதம் அளிப்பதற்காக (1 கொரிந்தியர் 15:20,23; 1 பேதுரு 1:3; யோவான் 11:26; 14:19; 1 கொரிந்தியர் 15:51–57).

இ. மனந்திரும்பி, விசுவாசித்து, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையை மாத்திரம் தராமல், உயிர்த்தெழுந்து ஜீவிக்கின்ற கர்த்தரை அறிந்து, அவரில் அன்புகூர்ந்து, அவருக்கு ஊழியம் செய்யக்கூடிய வாழ்க்கையைக் கொடுக்க (பிலிப்பியர் 3:10,14).

ஈ. நாம் நீதிமான்களாக்கப்பட்டதை நிச்சயப்படுத்த (ரோமர் 4:25).

இயேசுகிறிஸ்து தேவன் கொடுத்த வேலையை செய்து முடித்ததினால் தேவன் அவரை எழுப்பினார். நம்முடைய பாவங்களுக்காக பிராயச்சித்தம் செய்யப்பட்டதினால் தேவன் திருப்தியடைந்தார்.

உ. பாவத்தின் தன்மையை தெளிவாக அறிந்துகொள்ளவும், எங்குமுள்ள மனிதர்களும் பாவத்திலிருந்து தேவனிடத்திற்கு மனந்திரும்பி, நித்தியத்திற்காக தங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளவும் (லூக்கா 13:3; 24:46,47; அப்போஸ்தலர் 2:21; 17:30; ரோமர் 5:12).

ஊ. கிறிஸ்துவையும், அவருடைய மகிமையான சுவிசேஷத்தையும் புறக்கணிப்பவர்களுக்கென்று, நியாயத்தீர்ப்பின் நாளானது இருக்கிறது என்பதை உலகிற்கு அறிவிக்க (அப்போஸ்தலர் 17:31; யோவான் 5:22,27; எபிரெயர் 10:26,27).

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

**1.** உயிர்த்தெழுதலின் உபதேசம் மிகவும் முக்கியம், காரணம்

a. கிறிஸ்து சிலுவையில் மரித்ததை நமக்குக் காண்பிக்கிறது

b. கிறிஸ்து கன்னிகையிலே பிறந்தார் என்பதை நமக்குக் காண்பிக்கிறது

c. பவுல் நிருபங்களில் இதை முக்கியப் போதனையாக எழுதியிருக்கிறார்

**2.** அப்போஸ்தலர்களால் மிகவும் முக்கியமாக போதிக்கப்பட்டது எது ?

a. இயேசுவின் ஞானஸ்நானம்

b. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

c. கிறிஸ்துவின் பிறப்பு

**3.** 1 கொரிந்தியர் 15:12–19 வசனங்களின்படி, கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் அநேக காரியங்கள் உண்மையாகும் **நான்கு** காரியங்களை எழுதவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

**4.** உயிர்த்தெழுதலுக்கான **மூன்**று சாட்சிகளைக் கூறுக :–

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

**5.** கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிற்பாடு மக்களுக்கு எவ்விதம் தம்மை வெளிப்படுத்தினார் ?

a. ஆவியாக

b. சரீரமுள்ள நபராக

c. தேவதூதனாக

**6.** ஒரு கிறிஸ்தவனுக்கு ஆராதனை நாள் ஞாயிற்றுக்கிழமையாக இருப்பதின் முக்கியத்துவம் என்ன ?

a. அன்று விடுமுறை என்பதால்

b. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தபடியால்

c. ஓய்வுநாள் என்பதால்

7. உயிர்த்தெழுதல் கிறிஸ்து தேவன் என்பதைக் காண்பிக்கிறது, காரணம்
   a. கல்லறையிலிருந்து கல்லை புரட்டித் தள்ளினர்
   b. இயற்கையின்மீது அவருக்கு வல்லமை இருந்தது
   c. பரிசுத்த ஆவியானவர் பெந்தெகொஸ்தெ நாளன்று சீஷர்கள்மேல் வந்திறங்கினார்

8. கிறிஸ்து உயிரோடு எழுந்ததினால் நடந்த இரண்டு காரியங்களை குறிப்பிடவும் **? (இரண்டை வட்டமிடவும்)**
   a. தேவாலயத்தில் உள்ள திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது
   b. பரிசுத்த ஆவியானவர் பெந்தெகொஸ்தெ நாளன்று வர முடிந்தது
   c. சபை ஸ்தாபிக்கப்பட்டது
   d. உலகத்தின்மேல் இருள் இருந்தது

9. உயிர்த்தெழுதலினால் விசுவாசிகள் அடையும் முக்கிய ஆசீர்வாதம் எது **?**
   a. புதிய வாழ்க்கையும், உயிர்த்தெழுதவின் வல்லமையும் பெற்று வாழ முடியும்
   b. விசுவாசிகள் அந்நிய மொழியில் பேச முடியும்
   c. விசுவாசிகள் கிறிஸ்துவைப்போல் அனைத்து வல்லமையும் பெற முடியும்

10. விசுவாசிக்கு உயிர்த்தெழுதலினால் ஏற்படும் நம்பிக்கை என்ன **?**
   a. விசுவாசி கேட்கும் பொழுது, தேவன் அவருக்கு ஐசுவரியத்தைக் கொடுப்பார்
   b. தேவன் அவரின் வியாதியைக் குணப்படுத்துகிறார்
   c. தேவன் அவரை உயிரோடே எழுப்புவார்

11. அவிசுவாசிகளின் உயிர்த்தெழுதலில் அவர்களின் பங்கு என்ன **?**
   a. நியாயத்தீர்ப்பின் நாள் இருக்கிறது
   b. நரகத்தில் மனந்திரும்ப வாய்ப்பும் பெறுவார்கள்
   c. மரணத்தைக் குறித்தோ, எதிர்காலத்தைக் குறித்தோ நம்பிக்கையின்மை

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________

**முகவரி :** ____________________

____________________